
பக்கங்கள் 17 + 10

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 13 வியாழக்கிழமை 29.08.2024 | அதிர்வு 28

## தேர்தல் விஞ்ஞாபனத்தை இன்று வெளியிட்ட ரணில்



வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் "ரணிலுடன் 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# தீர்வு தொடர்பில் சஜித்தின் திட்டம்

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

"புதிய அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை, 13ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் உறுதிபூண்டுள்ளோம். அரசமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதியால் ஒருதலைப்பட்சமாக மீண்டும் பொறுப்பெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்பதுடன் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை வலுப்படுத்தி, மாகாண சபைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவோம்." 04

# அஜித் டோவல் இலங்கை விஜயம்

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடனும் சந்திப்பு



இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இன்று வியாழக்கிழமை இலங்கைக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அவர் இந்தியாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொடவைக் கொழும்பில் சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் உத்தேச திட்டங்கள் அடங்கிய அறிக்கையை இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் வழங்கியுள்ளார்.

வீதி, ரயில் மார்க்கம், மின்சாரம் மற்றும் எரிபொருள் ஆகிய பிரிவுகளின் கீழ் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த இணைப்பின் மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரத் தொடர்புகள் வலுப்பெற்று இலங்கையின் 04



# துப்பாக்கிச்சூட்டில் குடும்பஸ்தர் சாவு!

அநுராதபுரம், கல்கிரியாகம – திக்வண்ணாகம பகுதியில் துப் பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிப் படுகாய மடைந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

திக்வண்ணாகம பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான கருணாரத்ன முதியன்சே சலாகே குணசிங்க என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபரின் மார்பில் துப்பாக் கிச்சூடு பட்டதில் அவர் பலத்த காயம டைந்துள்ளார். அதையடுத்து அருகில் நின்றவர்கள் அவரை வைத்திய சாலையில் சேர்த்த பின்னரே அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# மொட்டுவின் எம்.பி சஜித்துக்கு ஆதரவு

வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குத் தனது ஆதரவை வழங்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார அறிவித்துள்ளார்.

சஜித்தை வெல்ல வைப்பதே தமது இலக்கு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# வயோதிபப் பெண் யானை தாக்கி பலி

ஒரு ஏக்கர் நெற்பயிர்களைத் தனியாக பராம ரிக்க முற்பட்ட நான்கு பிள்ளைகளின் தாய் யானை தாக்கி இன்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார் என்று கல்கமுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கல்கமுவ, பொரத்துகடவல பிரதேசத்தில் வசித்து வந்த எஸ்.ஆர்.பி.டபிள்யூ.எம். சந்திரவதி குமாரிஹாமி என்ற 74 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருடைய நான்கு பிள்ளைகளும் வெளி நாட்டில் வேலை பார்த்து வருவதால், அவர் மட்டும் தனியாக வீட்டில் வசித்து வந்தார் எனவும், வீட்டில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் உள்ள ஒரு ஏக்கர் வயலில் பயிர்களை விதைத்து இரண்டு நாட்களாகத் தானே பயிர்களை வெட்டி நடந்து வீட்டுக்குச் சென்றபோது யானை தாக்கியுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





## மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல்:

# 12 வருடங்களின் பின்னர் 4 பேர் குற்றவாளிகளாக அடையாளம்

### தீர்ப்புக்காக செப்டெம்பர் 4ஆம் திகதி வரை விளக்கமறியல்

(மன்னார் நிருபர் )

2012 ஆம் ஆண்டு மன்னார் நீதிவான் நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு தீர்ப்புக்காக இன்று வியாழக்கிழமை மன்னார் மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது 52 சந்தேகநபர்களில் 4 சந்தேகநபர்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனைய 48 சந்தேகநபர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 12 வருடங்களாக நடைபெற்று தற்போது விசாரணைகள் யாவும் நிறைவடைந்த நிலையில் இன்று தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் வழக்குத் தொடுநர் தரப்பிலான சாட்சியங்கள் யாவும் இந்த ஆண்டு மார்ச் மாதம் முடிவடைந்து ஒரு மாத காலத்துக்குள் எதிர்த்தரப்பு சாட்சியங்களுக்காக ஏற்கனவே தவணை வழங்கப்பட்டது.

இந்தநிலையில் இன்று இந்த வழக்கு மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது 52 சந்தேகநபர்களில் 4 சந்தேகநபர்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏனைய 48 சந்தேகநபர்களும் விடுவிக்கப்பட்டனர்.

4 சந்தேகநபர்களுக்குமான தீர்ப்பு வழங்க மன்று ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேற்படி 4 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 2012ஆம் ஆண்டு மன்னார் நகரத்தை ஒட்டிய கோந்தைப்பிட்டி கடற்கரையோரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய கடற்றொழில் துறை பகுதியிலிருந்து போரின்போது இடம்பெயர்ந்து புத்தளம் பகுதிக்குச் சென்றிருந்த முஸ்லிம் கடற்றொழிலாளர்கள் திரும்பி வந்தபோது கோந்தைப்பிட்டி கடற்றொழில்துறையைத் தம்மிடம் முழுமையாக மீளத் தருமாறு கேட்டிருந்தனர்.

இதையடுத்து தமிழ் கடற்றொழிலாளர்களுக்கென மன்னாரின் இரண்டாம் கட்டைப் பகுதியில் வேறு இடம் நீதிமன்றத்தால் ஒதுக்கப்பட்டது.

ஆனால், அந்த இடத்துக்கு இன்னொரு முஸ்லிம் கடற்றொழிலாளர் ஒருவர் உரிமை கோரி தமிழ்க் கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் செய்ய தடை விதிக்குமாறு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அந்த வழக்கு முடியும் வரையில் தமிழ் கடற்றொழிலாளர்களைக் கோந்தைப்பிட்டியிலேயே தொழில் செய்ய அனுமதிக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து தமிழ் கடற்றொழிலாளர்களுக்கென மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரை அவர்களுக்குப் பொலிஸார் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என நீதிமன்றத்தால் 2013 ஜுலை 16 ஆம் திகதியன்று உத்தரவிடப்பட்டது.

நீதிமன்றத்தின் உத்தரவை முஸ்லிம் கடற்றொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளாமல் தமிழ் கடற்றொழிலாளர்கள் உடனடியாகவே அங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது நீதிமன்றம் மீதான தாக்குதலில் அதிகாரிகள், பொலிஸார், பொதுமக்கள் எனப் பலரும் காயமடைந்தனர்.

மேலும், மன்னார் மேல் நீதிமன்றத்தின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்ட நிலையில் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

பின்னர் அந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டதாக 52 பேர் கைது செய்யப்பட்டு தொடர்ச்சியாக மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்று வந்தது.

12 வருடங்களாக நடைபெற்று வந்த வழக்கின் விசாரணைகள் நிறைவுற்று இன்று தீர்ப்பு வழங்க ஒத்திவைக்கப்பட்டது.

குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட 4 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

# வவுனியாவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளம் குடும்பஸ்தர் பலி

(கே.வசந்தன்)

வவுனியாவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் இன்று உயிரிழந்துள்ளார் என்று பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கற்பகபுரம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தனது நண்பர்களுடன் மது விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட இளைஞர் ஒருவர் மீது அங்கு வந்த குழுவொன்று கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்துப் படுகாயமடைந்த இளைஞர் வவுனியா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மீண்டும் வவுனியா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இதன்போது, சிகிச்சை பலனின்றி அவர் இன்று மரணமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம், சில்லாலை பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான மைந்தன் இருதயராஜா (வயது 36) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வவுனியா வைத்தியசாலையில் சடலத்தைப் பார்வையிட்ட மாவட்ட நீதிபதி இது தொடர்பான வாக்குமூலங்களையும் பெற்றிருந்தார்.

சம்பவம் தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தேர்தல்...

நாட்டை வெற்றிகொள்ளும் ஐந்தாண்டுகள்" என்ற தொனிப்பொருளில் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வியாழக்கிழமை கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வெளியிடப்பட்டது.

தேரவாத வர்த்தகப் பொருளாதாரம், 2025 இற்கு அப்பால் செல்லும் செயல் முறை, ஒளிமயமான சமுதாயத்தை நோக்கி, வெற்றிபெறும் தாய்நாடு, ஒன்றிணைந்த இலங்கை ஆகிய 5 பிரதான கூறுகளை இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளடக்கியுள்ளது.

www.ranil2024.lk என்ற இணையதளத்தில் இந்தத் தேர்தல் விஞ்ஞானபனத்தை மும்மொழிகளிலும் பார்வையிட முடியும்.

### அஜித்...

வருடாந்த பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3 வீதத்தில் இருந்து 6 வீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இன்று மாலை தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தீர்வு...

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்திஃஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சகலருக்கும் வெற்றி' என்ற தலைப்பில் இன்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தை வலுப்படுத்துதல்' என்ற உப தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:–

"எந்த வகையிலும் இனவாதம், தீவிர வாதம் அல்லது பிரிவினைவாதம் ஊக்குவிக்கப்படாது. ஒவ்வொரு குடிமகனும் இனம், மதம், சாதி, வர்க்கம் அல்லது பாலினம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் சட்டத்தின் கீழ் சமமாக நடத்தப்படுவார்.

இலங்கையின் தற்போதைய அரசமைப்பின கீழ் தேவையான முறையில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப் படுத்துவோம்.

பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும்போது அனைத்து நிறுவனங்களிலும் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு சட்டத்தை உருவாக்குவோம்,

மதத் தலைவர்கள், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக

உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து முறையாக கருத்துக்களைப் பெற்று தற்போதைய அரசமைப்பை மாற்றி புதிய அரசமைப்பை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தி/ ஐக்கிய மக்கள் கூட்டணி அர்ப்பணிப்புடன் உள்ளது.

இந்தச் செயல்முறையில் எமது கொள்கை என்னவென்றால் தற்போதைய அரசியல் முறையை ஒரே நாட்டுக்குள் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய நாடாளுமன்ற முறைமைக்கு மாற்றுவதாகும்.

முடிவெடுக்கும் செயல்முறையில் குடிமக்களைச் செயலில் ஈடுபடுத்த, கிராம அரசு மற்றும் நகர அரசு எனப்படும் சமூக அடிப்படையிலான ஜனநாயக நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

புதிய அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை, 13ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் உறுதி பூண்டுள்ளோம்.

அரசமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதியால் ஒருதலைப்பட்சமாக மீண்டும் பொறுப்பெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்பதுடன் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை வலுப்படுத்தி, மாகாண சபைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

தேசிய அரசு நிறுவப்படும் பட்சத்தில் அமைச்சர், பிரதி அமைச்சர், இராஜாங்க அமைச்சர் பதவிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நாடாளுமன்றத்துக்கு ஆற்றலை வழங்கும் அரசமைப்பு ஏற்பாடுகள் இரத்துச் செய்யப்படும்.

தேசிய அரசு நிறுவப்பட்டாலும் அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பிலான வரையறை ஏற்புடையதாக இருக்கும்.

6 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும். மேலும் அதிகபட்ச நிதி திறன் மற்றும் செயல்திறனுடன் மாகாண சபைகள் செயற்படுவதை உறுதி செய்ய விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், காணாமல்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவை வலுப்படுத்தப்பட்டு, அவற்றின் நோக்கங்களைத் திறம்படச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.


இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற வசதிகளை வழங்குவோம். பாதுகாப்புத் தேவைகளுக்குத் தேவையற்ற அனைத்து நிலங்களும் தாமதமின்றி அவற்றின் உரிமையாளர்களுக்குத் திருப்பி அளிக்கப்படும். அரச ஆதரவுடன் மக்கள் தொகை மாற்றங்கள் செய்யப்படாத கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

மேலும், மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக முதலீடு செய்ய விசேட சலுகைகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கப்படும்.

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், சமூக மேம்பாட்டுப் பணிகள் மற்றும் நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கட்டமைக்கவும் அபிவிருத்தி செய்யவும் நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை உறுதி செய்வதற்கு ஒரு சர்வதேச ஒத்துழைப்பு மாநாட்டை ஏற்பாடு செய்வோம்.

சட்டவிரோதமாக தள்ளிப்போடப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை விரைவாக நடத்தத் தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை எடுப்பும். நீதித்துறை நிர்வாகத்தில் நிறைவேற்று அதிகாரத்தின் தலையீட்டைத் தடுக்க

சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன், நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் செயல்திறனை நிறுவத் தேவையான சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்வோம்." – என்றுள்ளது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சஜித்தின் விஞ்ஞாபனம்

பலரும் எதிர்பார்த்த - ஐக்கிய மக்கள் சக்தியின் - ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தேர்தல் விஞ்ஞாபனம் இன்று பகல் வெளியாகிவிட்டது.

அதேசமயம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்' என்ற தலைப்பிலான தேர்தல் விஞ்ஞாபனமும் இன்று பகல் வெளியாகி உள்ளது.

இப்போது முதல் கட்டமாக 'சகலருக்கும் வெற்றி' என்று தலைப்பில் வெளியிடப்பட்ட சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தெரிவித்துள்ள முக்கிய கருத்துக்கள், அம்சங்களை நோக்குவோம்.

✦ மதத் தலைவர்கள், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களின் கருத்துக்களை முறையாக பெற்றுப் புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும்.

✦ தற்போதைய அரசியல் முறைமையை ஒரு நாட்டுக்குள் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய நாடாளுமன்ற முறைமைக்கு மாற்றுவதே நமது கொள்கை.

✦ முடிவெடுக்கும் செயல்முறையில் குடிமக்களை ஈடுபடுத்துவதற்காக 'கிராம அரசு', 'நகர அரசு' எனப்படும் சமூக அடிப்படையிலான ஜனநாயக நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

✦ புதிய அரசமைப்பு ஏற்றுக் கொள்ளப்படும் வரை 13 ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசு உறுதி கொண்டு உள்ளது.

✦ அரசமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் ஜனாதிபதியினால் (ஆங்கிலப் பிரதியில் ஜனாதிபதி என்று இல்லை) ஒரு தலைப் பட்சமாக மீண்டும் பொறுப்பு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது.

✦ மாகாண சபை தேர்தல்கள் 6 மாதங்களுக்குள் நடத்தப்படும்.

✦ யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கட்டமைக்கவும் அபிவிருத்தி செய்யவும் ஒரு சரவதேச ஒத்துழைப்பு மாநாடு கூட்டப்படும்.

- இவையே சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இடம்பெற்ற முக்கிய அம்சங்கள் ஆகும்.

இந்த விடயங்கள் கொள்கை ரீதியாக முக்கிய அம்சங்கள் எனினும், அவை கூறப்பட்டபடி நடைமுறைப்படுத்தப்படுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் வரை அரசமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதும் -

ஆறு மாதத்துக்குள் மாகாண சபைகள் இயங்கும் என்ற உறுதி மொழியும் -

உடனடி செயற்றிட்டங்கள் என்ற முறையில் தமிழர் தரப்பினால் வரவேற்கத்தக்கவை.

அரசமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் ஒருதலைப் பட்சமாக மீண்டும் பொறுப்பு எடுக்கப்பட மாட்டாது என்று அம்சம் சமஷ்டிக்கான அடிப்படை விவகாரம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஆயினும் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதிகார பகிர்வு தொடர்பில் ஆங்கிலப் பிரதியில் இருக்கும் தெளிவு, தமிழ் மொழியாக்கத்தில் இல்லை. அதில் குழப்பம் இருப்பது முதல் பார்வையிலேயே தென்படுகின்றது. சிங்களப் பிரதியுடன் ஒப்பிடுவதன் மூலமே இதன் உண்மை தன்மையை உறுதிப் படுத்த வேண்டும்.

அதனையும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களையும் இனிவரும் இதழ்களில் பார்ப்போம்.



# பழைய மாணவர்களால் திருத்தப்பட்ட பாடசாலையின் வகுப்பறைக் கட்டடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு தேசிய பாடசாலை பழைய மாணவர்களால் புனரமைப்புச் செய்யப்பட்ட வகுப்பறைக் கட்டடம் மாண வர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காகக் கையளிக்கப்பட் டுள்ளது.

பட்டிருப்பு கல்வி வலயத்துக்கு உட் பட்ட பட்டிருப்பு மத்திய மகா வித்தி யாலயத்தில் தரம் 09 மாணவர்களின் வகுப்பறைக் கட்டிடமானது 2001 ஆம் ஆண்டில் க.பொ.த. சாதாரண தர வகுப்பில் கல்வி கற்ற பழைய மாண வர்களால் மூன்று லட்சத்து முப்பதாயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப் பட்டு மாணவர்களது கற்றல் நடவடிக் கைகளுக்காக புதன்கிழமை (28) கையளிக்கப்பட்டது.



பாடசாலை அதிபர் எம்.சபேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தரம் 9 மாணவர் கள் கலந்து கொண்டனர்.








# கட்டியம் சொன்ன கலை அரங்கம்!

கனவு மெய்ப்படவேண்டும். அற்புதமான ஒரு கலை அரங்கு. போர்க் கால அனர்த்தங்களின் பின்னராக பரிணமிக்கும் கலைகளில் முகிழ்க்கும் இளைய தலைமுறை. தம் அடையாளப் பேணலில் தமது பாரம்பரிய இசை – நடன ஆளுமையில் சிறக்கும் புலம்பெயர்ந்த புதிய தலைமுறை.

இம் முப்பரிமாண இணைப்பில் தோற்றிய ஒரு கனவு, 'கலா ரசனா'. நம்முடைய கலைப் பொக்கிஷங்களாக நாம் பேணும் இசை, நடனம் இப்போது இந்தியா, இலங்கைக்கு வெளியே, புலம்பெயர் நாடுகளிலும் வளர் கலைகளாகின்றன. ஐரோப்பிய நாடுகளிலே, ஸ்கன்டினேவிய நாடுகளிலே, கனடாவிலே, அவுஸ்திரேலியாவிலே கர்நாடக இசையிலும் பதரநாட்டியத்திலும் திறன்மிக்க கலைஞர்கள் பலர், இக் கலைகளில் மெச்சத்தக்க ஆற்றலுடன் அரங்கேற்றங்கள் வாயிலும், வேறு மேடை நிகழ்வுகளிலும் பலரை வெளிப்படுத்துவதை பரவலாக காண்கிறோம்.

அந்நியப்பட்ட வாழ்விலும் ஒரு பிணைப்பாக இழையோடும் இக் கலைகளில் இப் புதிய தலைமுறையினரிடையேயும் ஓர் அந்நியோன்ய இணைப்பை அவாவி, இக் கலைகள் வழி அவர்களை சங்கமிக்கவைத்து, அச் சங்கமத்தில் திளைக்கும் 'சங்கமம்' என்ற நிகழ்வு, 'கலா ரசனா'வின் கனவாகியது அது நனவில், அழகுடன் அரும்பியிருக்கிறது.

கடந்த 19 ஆம் திகதி கலாரசனாவின் முதலாவது சங்கமம் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் ஒரு முத்திரையைப் பதித்திருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கு இந்திய அரசு வழங்கிய கலாசார மண்டபத்தின் நவீனத்துவ வசதிகளும், அது நிறைக்கும் ரம்மியமும் இத் தலைமுறைகளின் சங்கம கனவை இக் கலாசார மண்டபத்துடனும் இணைத்தது.

இசையும் நடனமுமாக வருடத்தில் இரு தடவைகள் நல்லூர் உற்சவ காலத்தில் இரு தினங்களும், மார்கழியில் சென்னை இசைவிழாக் காலத்தில் இருதினங்களுமாக திட்டமிடப்பட்டுள்ள சங்கமம் முதல் நிகழ்வு, இலங்கைக் கலைஞர்களுடன் ஒருநாள் நிகழ்வாக நடைபெற்றது.

'ராகசுதா' என்ற வயலின் இசையும், 'நூபுர லாவண்யம்' என்ற நடன நிகழ்ச்சியும் இதில் இடம்பெற்றன. வயலின் வாத்தியத்தில் ஒலியின் தரத்துக்காக அதன் அமைப்பில் சிறு மாற்றங்களைச் சிலர் செய்வதுண்டு. ஆனால், இவ் வொலித் தரத்துக்காக இரட்டை வயலினும் கண்டுபிடிப்பாகியது. வயலின் வித்வான் எல். சுப்பிரமணியத்தின் சகோதரரான எல். சங்கர் இதனை அறிமுகம்செய்தார்.

'ராகசுதா'வில், தானே தன்கைபட உருவாக்கிய இரட்டை வயலினுடன் பத்மநாதன் ஷியாம்கிருஷ்ணா இந்த வயலின் நிகழ்ச்சியை அளித்தார். அந்த வயலினுடன் இதுதான் முதல் கச்சேரி என்று சொன்னார்.

பெஹாக் வர்ணத்துடன் ஆரம்பித்து, சாருகேசியில் ராகம், தானம்,பல்லவி. நல்லூர் முருகன் பேரில் அவரே தயாரித்திருந்தார். முன்னதாக, சாவித்திரி ராகத்தில் ஒரு கீர்த்தனை. பொதுவில் அரிதானதான இந்த ராகத்தில், எல். சங்கர் வாசித்திருந்த "ஆனந்த நடமாடும் தில்லை..." கீர்த்தனை. பின்னர், ஜனரஞ்சகமாக "சின்னஞ்சிறு கிளியே..." முத்தாய்ப்பாக, தனசிறி தில்லானா.

மண்டபம் நிறைந்திருந்த அவை, லயிப்பில் ஆழ்ந்திருந்தது. சுகமும் விறுவிறுப்பும் எம். எஸ். கோபால கிருஷ்ணன், எல். சுப்பிரமணியம் ஆகியோரை நினைவில் கொணர்ந்தன.



தந்தையார் பத்மநாதன் ஒரு வயலின் வித்துவான். பாட்டு, மிருதங்கம் ஆகியவற்றிலும் தேர்ந்தவரான ஷியாம்கிருஷ்ணா வளமாகும் ஒரு கலைஞர்.

'நூபுர லாவண்யம்' என்றால், சலங்கையின் அழகு என்று பொருள் கொள்ளலாம். நடனத்தின் அம்சங்கள் என்ன? நூபுர லாவண்யத்தில், அவை அத்தனையும் அழகு, கொள்ளை அழகு. முழுமையான, திட்டமான அழகு நேர்த்தி.

சிறுமிகளும் யுவதிகளுமாக இருபத்துநான்கு பேர் மாறிமாறி, ஒருசொட்டு தாமதமற்ற, வேகமான அசைவுகளும், நளினமுமான நடன அமைப்புடன் வெளிப்படுத்திய சித்தரிப்பு யுக்திகள் பிரமிப்பூட்டின.

திருப்புகழுடனான நாட்டை அலாரிப்பு, அபிநயமும்சேர, தோற்றுவித்த கம்பீரம், நிகழ்ச்சி முழுமையும் நிலைகொண்டது.

அபிநயத்துக்கு முத்திரையாகும் "பாரோ கிருஷ்ணையா..." யமன் கல்யாணி பதம். ஓர் ஆணும் பெண்ணும் சிவன், சக்தியாக அளித்த "சம்போ சங்கர சிவா..." பின்னர், 'நான் இராவணன் பேசுகிறேன்' நாட்டிய நாடகம். கதை அமைப்பிலும் நாட்டிய அமைப்பிலும் புதுமைகளை சரளமாய் நிறைத்தது. சீதையைக் கவர்ந்துசென்ற, 'நல்லவன்' இராவணனை செப்புகிறது.

நிகழ்ச்சி முழுமையும் இடையிடையே மிளிர்ந்த நாட்டிய நிலைகள், ஆசிரியையின் படைப்பாற்றலை சாற்றியது.

'நர்த்தன ஷேத்திரா' நடன பள்ளியின் இயக்குநர் திருமதி பிரியதர்சினி வாகீசனின் மாணவர்கள் இவர்கள். இவருடைய சிரேஷ்ட மாணவி செல்வி ஆதித்தியா ஜெயபாலன் துணையாகவிருந்தார்.

ஒளி அமைப்பு பிரமாதம். நிகழ்ச்சிக்கு மேலும் ஒரு ரசனை சேர்த்தது. ஆக, யாழ் கலாசார மண்டபத்தில் லண்டன் 'கலா ரசனா'வின் இந்த வேனில் கால 'சங்கமம்' நிகழ்ச்சி, ஆவலை நிறைக்கும் கட்டியமாகியிருக்கிறது. மார்கழி 'சங்கமம்', புலம்பெயர்ந்த நாட்டு வித்துவ செழுமையுமாய் கலாரசனை சேர்க்கும்.



# அம்பாறை வயலில் காணப்படும் வைக்கோலை எரிக்க வேண்டாம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில சிறுபோக அறுவடை நிறைவுபெற்ற நிலையில் வயலில் காணப்படும் வைக்கோலை தீயிட்டு எரிக்க வேண்டாம் என்று விவசாய திணைக்கள அதிகாரிகள் விவசாய விரிவாக்கல் பிரிவினர் ஊடாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

வயதிலிலுள்ள வைக்கோல் மாடுகளுக்கு உணவாகப் பயப்படுத்துவதற்காக சிலர் வீடுகளில் சேமித்து வைக்கின்றனர். இதனைத் தவிர அதிகமான விவசாய நிலங்களில் வைக்கோல் தற்போது தீயிட்டு எரிக்கப்பட்டு வருகின்றது.

இதனால் விவசாய நிலத்தில் காணப்படும் பயிர் வளர்ச்சிக்கு பயன்தரும் நுண்ணுயிர்கள் அழிக்கப்படுகின்றன.

இவற்றை வயலிலேயே இறக்க விட்டு நீர் கட்டி வயலை உழும் போது வயலின் போசணை வளம் பல மடங்கு அதிகரித்து நெற்பயிர்கள் நன்றாக செழிப்பாக வளரும்.

எனவே விவசாயிகளுக்கு சேதனைப் பசளையாக மாறக்கூடிய வைக்கோலை எரிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு விவசாய போதனாசிரியர்கள் விவசாய அமைப்புகளுக்கும், விவசாயிகளுக்கும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் அறி வுறுத்தல் வழங்கி வருகின்றனர்.







# புலமைப் பரிசில் மாணவர்களுக்கு இலவசமாக மாதிரி வினாத்தாள்கள்

(ராசையா கவிஷான்)

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்நோக்கவுள்ள மாணவர்களின் பெறுபேறுகளை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணக்கருவின் கீழ் வேர்ல்ட் ஆக்‌ஷன் பவுண்டேசன் மற்றும் லங்கா விஷன் ஆக்‌ஷன் பவுண்டேசன் ஆகியவற்றின் ஸ்தாபகர் சுபாஷ் சுந்தர்ராஜின் நிதிப் பங்களிப்பில் நுவரெலியா கல்வி வலயத்தின் கோட்டம் 3 இல் உள்ள 30இற்கும் அதிகமான தமிழ் பாடசாலைகளுக்கு எதிர்பார்க்கை வினாக்கள் உள்ளடங்கிய மாதிரி பரீட்சை வினாத் தாள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்களிடம்இந்த நிகழ்ச்சி திட்டத்தின் முகாமையாளர் ரா.கவிஷான் வினாத்தாள்களை கையளித்தார். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் எதிர்பாக்கை வினாக்கள் உள்ளடங்கிய குறித்த வினாப்பத்திரம் மாணவர்களின் பெறுபேற்றை அதிகரிப்பதில் பெறும் பங்கு வகிக்கும் என ஆசிரியர்கள் தெரிவித்தனர்.




# கொரோனா ஜனாஸாக்களை எரித்ததை ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு!

## ஜனாதிபதி முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது என்கிறார் கலீலுர் ரஹ்மான்

(கே. எ. ஹமீட்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையை நேற்று (28) சந்தித்தார். இதன்போது கொரோனா தொற்றுள்ளதாகக் கூறித் தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக்களுக்கு நீதியை நிலைநாட்டி, அவர்களின் குடும்பத்தினருக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கும் விதமாக அனைத்து தரப்பினரையும் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பதாகத் தெரிவித்தார். இந்த அவரது கருத்தை வரவேற்பதுடன் இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ள அவருக்கு எனது நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த கொரோனா வைரஸ் பரவலின் போது உயிரிழந்த முஸ்லிம்கள் மற்றும் ஏனைய மதத்தினரின் உடல்களை தகனம் செய்வதற்கு அரசுக்குப் பரிந்துரைத்த தரப்பினரின் பொறுப்புக் கூறல் தொடர்பில் ஆராய்வதற்காக ஏனைய கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிப்பதாக ஜனாதிபதி



ரணில் விக்ரமசிங்க முஸ்லிங்களின் உயரிய மரியாதைக்குரிய உலமா சபையினரிடம் தெரிவித்துள்ள இந்த உறுதிமொழியானது வரவேற்கத்தக்கது.

மேலும், கொரோனா தொற்றுள்ளதாகக் கூறித் தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக்களுக்கு நீதியை நிலைநாட்டுவது தொடர்பில் ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைக்கக் கோரி ஜனாதிபதி மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நான் அனுப்பிய கடிதத்தின் பதிலை இலங்கை முஸ்லிம்களின் உயர் சபையான அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் முன்னிலையில் உறுதியளித்துள்ளமையானது தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக்களின் குடும்பங்களுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட மரியாதையாகக் கருதுகின்றேன்.

தேர்தலுக்கு முன் நாடாளுமன்றம் கூடும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அவர்கள் இந்த தெரிவுக்குழுவை நியமிப்பதன் மூலம் கொரானா தகனம் தொடர்பாக அரசியல் மேடைகளில் முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் அரசியல் தலைவர்களின் வாயில் பூட்டு போட்டு அடைக்க முடியும். முஸ்லிம் அரசியல் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் இருந்து கொண்டு, கொரோனா தொற்றுள்ளதாக கூறி தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக்களை வைத்துப் பிச்சைகாரனின் காயம் போல், அதனை வைத்து மட்டமான அரசியலை செய்தார்களே ஒழியே அர்த்தமுள்ள முறையில் கொரோனா தொற்றுள்ளதாக கூறி தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் தெரிவுக்குழுவைக் கூட கோராமல் தமது கீழ்தரமான அரசியல் இலாபங்களுக்காக ஜனாசா எரிப்பை பயன்படுத்திக் கொண்டிருப்பதையிட்டு வருத்தமடைகிறேன்.

எனவே, எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் கொரோனா சடலங்களை தகனம் செய்தமை தொடர்பில் தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கு கட்சி, எதிர்க்கட்சி வேறுபாடுகளை விடுத்து இந்த நாட்டிலுள்ள முஸ்லிம் சமூகத்துக்கு நீதி வழங்குமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் முஸ்லிம் சமூகம் சார்பில் கோரிக்கை விடுக்கிறேன்.– என்றுள்ளது.



# இலங்கை ஜனநாயக முன்னணியின் அம்பாறை மாவட்டத்துக்கு அமைப்பாளர்

(எம்.எப்.றிபாஸ்)

இலங்கை ஜனநாயக முன்னணி கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளராக ஏ.எல். இஸ்ஸதீன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கட்சியின் உயர் பீடக் கூட்டம் அண்மையில் அக்கரைப்பற்றில் நடைபெற்ற போதே அவருக்கான நியமன கடிதத்தினை தலைவர் ஏ.பீ. கமால்தீன் வழங்கி வைத்தார்.





# மருதமுனை அல் -மதீனா அணி மாகாண சம்பியனாகத் தெரிவு!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கிழக்கு மாகாணத்தில் கல்வி அமைச்சால் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் விளையாட்டு நிகழ்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் 18 வயதுக்கு உட்பட்ட மாகாண மட்ட உதைப்பந்தாட்ட போட்டியில் மருதமுனை அல்- மதீனா வித்யாலயம் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மாகாணமட்ட உதைபந்தாட்ட போட்டிகள் 27, 28 ஆம் திகதிகளில் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்றன. இந்த நிலையில் 18 வயதுக்கு உட்பட்ட உதைப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று (28) நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் கிண்ணியா வலயததுக்கு உட்பட்ட அல் – அமீன் வித்தியாலயம், கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட மருதமுனை அல்– மதீனா வித்தியாலயம் ஆகிய அணிகள் ஒன்றை ஒன்று எதிர்த்து விளையாடின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் இரு அணிகளும் 01:01 என்ற கோல் சமநிலையை பெற்றன. போட்டி நிறைவடைய தண்டனை உதை மூலம் சாம்பியன் தீர்மானிக்கப்பட்டது. தண்டனை உதையில் 04:02 என்ற கோல் வித்தியாசத்தில் மருதமுனை அல்- மதீனா அணி சாம்பியன் அணியாக தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியது.

இதனை அடுத்து பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களை பிரதான வீதியில் இருந்து பாடசாலை வரைக்கும் கல்வி சமூகம், நலன் விரும்பிகள் மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

பாடசலை அதிபர் அதிபர் என்.எம். முஹம்மட் முபீன், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களான எம். ஆர்.ஏ.கியாஸ், எஸ்.எம்.எஸ்.ஏ. வாஜித் மௌலானா, விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எஸ்.அஸ்றி ஆகியோருக்குப் பாடசாலைச் சமூகம் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.









# யாழ். நகரில் நடைபெற்ற இலக்கிய மாலை; பத்மா இளங்கோவனின் நூல்கள் அறிமுகம்!

முன்னோடிகள் இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் ‘இலக்கிய மாலை’ நிகழ்வு, சிறுவர் இலக்கியச் சிந்தனை அரங்காகக் கடந்த 25 ஆம் திகதி ஞாயிறு மாலை யாழ்ப்பாணம் ‘எங்கட புத்தகங்கள்’ இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பத்மா இளங்கோவனின், சிறுவர் இலக்கிய நுட்பங்கள், சிறுவர் தமிழ் அமுதம், கொரோனாவின் தடங்களில் ஆகிய மூன்று நூல்களின் அறிமுகங்கள் இடம் பெற்றன.

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வெளியீட்டுரையை வி.ரி. இளங்கோவன் நிகழ்த்தினார்.

சிறுவர் இலக்கியச் சிந்தனை உரைகளை முனைவர் தே. தேவானந்த், இயல்வாணன் ஸ்ரீ குமரன், எம். மயூரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் கருத்துரை வழங்கினார். சபா தனுஜன் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.









# கொழும்பு சைவ மங்கையர் ரெனிஸ் போட்டியில் சாதனை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கை பாடசாலைகள் ரெனிஸ் சம்மேளனமும், மேல் மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த கொழும்பு வலய பாடசாலைகளுக்கு இடையிலான ரெனிஸ் போட்டியில் கலந்து கொண்ட கொழும்பு சைவ மங்கயர் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர்.

12 வயதுக்கு உட்பட்ட மாணவிகள் சம்பியன்களாகவும், 18 வயதுக்கு உட்பட்ட மாணவிகள் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.



# மன்னார் நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் இன்று வியாழக்கிழமை (29) பணிப் பகிஸ்கரிப்பை மேற்கொண்டனர்.

இதன் காரணமாக இன்று அழைக்கப்பட்ட அனைத்து வழக்கு விசாரணைகளும் பிரிதொரு தினத்துக்குத் தவணை இடப்பட்டுள்ளது.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக கொழும்பில் அனாமதேய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யக் கோரியும் இன்று வியாழக்கிழமை (29) மன்னார் நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

நீதிமன்றத்திற்கு சென்ற நிலையில் எவ்வித வழக்கு விசாரனைகளுக்கும் சமூகமளிக்காது பணிப்பகிஸ்கரிப்பை மேற்கொண்டனர்.

மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தால் இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை (30) அடையாள பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ள உள்ளதோடு ,ஊடக சந்திப்பும் மேற்கொள்ளப்படது என்று மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இ.கயஸ் பெல்டானோ தெரிவித்தார்.

# முறாவில் சித்தி விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா ஆரம்பம்

வடமராட்சி, தென்புலோலியூர் முறாவில் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 29 ஆம் திகதி இன்று வியாழக்கிழமை முற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

மஹோற்சவத்தின் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் நாள்கள் சாதாரண முறையிலான திருவிழாவாக இடம்பெறும்.

எதிர்வரும் ஐந்தாம் திருவிழாவான 2 ஆம் திகதி திங்கட்கிழம கதவு சாத்தி தேவாரம் பாடி திருக்கதவு திறக்கப்படும். ஆறாம் திருவிழாவான 3 ஆம் திகதி செவ்வாய்கிழமை மாம்பழத்திருவிழாவும், ஏழாம் திருவிழாவான 4ஆம் திகதி புதன்கிழமை குடமுழுக்கு உற்சவமும் எட்டாம் திருவிழாவான 5 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டை, சப்பைரதத் திருவிழாவும், ஒன்பதாம் திருவிழாவான 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், பத்தாம் திருவிழாவான 7ஆம் திகதி சனிக்கிழமை சதுர்த்தி உற்சவத்துடன் கூடிய தீர்த்தோற்சவமும் நடைபெறுவதுடன் மஹோற்சவம் நிறைவுறும்.

துன்னாலை அல்லையம்பதி சாரதா பீடத்தைச் சேர்ந்த, கிரியா கிரம ஜோதி சிவஸ்ரீ ராம் சபாநாதக்குருக்கள் பிரதம குருவாக இருந்து மஹோற்சவத்தை நடத்திவைப்பார்.



# அம்பாறையிலுள்ள 4 தொகுதிகளிலும் உற்பத்தித் தொழிற்சாலைகள் அமையும்

## ஆலையடிவேம்பில் சஜித் தெரிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அம்பாறையிலுள்ள 4 தொகுதிகளிலும் உற்பத்தி தொழிற்சாலைகள் அமைக் கப்படும். அவற்றின் ஊடாக அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற் றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஷ தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் செவ்வாய்கிழமை (27) இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உயர்தரத்திலான ஐம்பது கிலோ கிராம் உரமூட்டையை 5000 ரூபாவுக்கு வழங்குவோம். உரத்தை வழங்கும் போது கறுப்புச் சந்தை மாபியாக்களுக்கு இடமளிக்காமல் முறையான திட்டமி டலுடன் அவற்றை விநியோகிப்போம். நியாயமான விலையில் திரவ உரத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப் போம்.

கொவிட் தொற்றாலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களாலும், பொரு ளாதார நெருக்கடிகளால் நாடு வங்கு ரோத்தடைந்தமையாலும் வீழ்ச்சி யடைந்த விவசாயத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். பாதிக்கப் பட்டுள்ள விவசாயிகளுக்காக கடன் தள்ளுபடி செய்யப்படும்.

அதேபோன்று நெல்லுக்கு நிர்ணய விலையை வழங்குவோம். நவீன முறைமையின் கீழ் விவசாயத்தை மேம் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரந்துபட்ட நீர் வழங்கல் செயற்றிட்டமும் நடைமுறைப்படுத்தப்படும். இங்குள்ள அனைத்து பாடசாலைகளையும் நவீன பாடசாலைகளாக்கி தகவல் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவோம்.

வறுமையை ஒழிப்பதற்காக ஒவ் வொரு குடும்ப குடும்பத்துக்கும் 20 000 ரூபாய் நலன்புரி கொடுப்பனவு வழங்கப்படும். இதன் ஊடாக உற்பத் திகள் முதலீடுகள் ஊக்குவிக்கப்படும். அம்பாறையில் உள்ள 4 தொகுதிகளுக் கும் உற்பத்தி தொழிற்சாலைகளை அமைத்துக் கொடுப்பதோடு முடியுமான நடவடிக்கைகள் அனைத்தையும் முன்னெடுத்து உங்களை மேம்படுத்துவ தற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம்.- என் றார்.





# ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கான கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரபின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர்களின் கூட்டம் மாளிகைக்காடு தலைமை அலுவலகத்தில் மாளிகைக்காடு பிரதேச அமைப்பாளரும், முன்னாள் காரைதீவு பிரதேச சபையின் உதவி தவிசாளருமான ஏ.எம். ஜாஹிர் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து அவரின் வெற்றிக்கான பங்காளிகளாக மாறுவதற்கான யுக்திகளை கையாள்வது சம்பந்தமாகவும், அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம், தமிழ் பிரதேசங்களில் தேர்தல் பிரச்சாரங்களை தொடர்ந்து மேற்கொள்வது சம்பந்தமாகவும் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து ஹரீஸை நிறுத்தும் தீர்மானம் வாபஸ்

## செயலாளர் நிஸாம் காரியப்பர் அறிவிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர் பீடத்தில் இருந்து அக்கட்சியின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸை இடைநிறுத்தும் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டுள்ளது என்று கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் ஹரீஸ் எம்.பி. மீண்டும் கட்சியின் பிரதித் தலைவராக செயற்படுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விசேட உச்ச பீடக் கூட்டம் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் புதன்கிழமை (28) மாலை மருதமுனை தனியார் விடுதியில் இடம்பெற்றது.

கட்சியின் உயர்பீட அங்கத்துவத்தை இடைநிறுத்தி அனுப்பப்பட்ட கடிதத்துக்கு ஹரீஸ் எம்.பி. சத்தியக் கடதாசி மூலமாக தலைவருக்கு அனுப்பியிருந்த பதில் இதன்போது ஆராயப்பட்டது.





அதில் அவர் மிகத் தெளிவாக கூறியுள்ள விடயம் யாதெனில், தான் 2024.08.04 ஆம் திகதி கூடிய உச்ச பீடம் எடுத்த முடிவுடன் முற்று முழுதாக இருப்பதாகவும் தனக்கு இது சம்பந்தமாக எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்றும் தெளிவாக தெரிவித்துள்ளார்.

தனக்கு ஆரம்ப இரண்டு வாரங்களாக சஜித் பிரேமதாஸவுடைய பிரச்சாரக் கூட்டங்களுக்கு வர முடியாமல் போனதற்குக் காரணம் தன்னுடைய சுகவீனம் என்று தெரிவித்துள்ள ஹரீஸ், அதை நிரூபிப்பதற்கு ஒரு வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தையும் இணைத்து அனுப்பியுள்ளார்.

மேலும், அதற்குப் பிற்பாடு நடத்தப்பட்ட சஜித் பிரேமதாஸவின் சகல பிரச்சாரக் கூட்டங்களுக்கும் ஹரீஸ் தொடர்ச்சியாக கலந்து கொண்டிருந்தார்.

இதன் அடிப்படையில் அவரால் அனுப்பப்பட்ட சத்திய கடதாசியை ஆராய்ந்த உயர்பீடம், ஹரீஸின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டு அவரை உயர் பீத்தில் இருந்து இடைநிறுத்தும் தீர்மானத்தை நீக்கிக் கொண்டது என்று மு.கா. செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் மேலும் தெரிவித்துள்ளார்.



# த.வெ.க. மாநாட்டில் சிறப்புப் பரிசு

## விஜயின் அறிவிப்பால் உறுப்பினர்கள் 'உற்சாகம்'

தமிழக வெற்றிக் கழகத்துக்கு அதிக உறுப்பினர்களைச் சேர்க்கும் மாவட்ட செயலாளர்களுக்கு கட்சி மாநாட்டில் வைத்து விஜய் பரிசு வழங்கவுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் விஜய் கட்சியைத் தொடங்கியுள்ளார். இது குறித்த அறிவிப்பு கடந்த சில மாதங்களுக்கு முன்பு வெளியானது.

இதன்தொடர்ச்சியாக கடந்த 22ஆம் திகதி தமிழக வெற்றிக் கழகத்தின் கொடி மற்றும் பாடல் அறிமுக நிகழ்ச்சி சென்னையில் நடந்தது.

இதன் பிறகு அனைவரது பார்வையும் கட்சியின் மாநாடு மீதுதான் இருந்து வருகின்றது.

இந்நிலையில் விக்கிரவாண்டியில் அடுத்த மாதம் (செப்டம்பர்) 23ஆம் திகதி தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு நடைபெறவுள்ளது.

இதற்காக அனுமதி மற்றும் பாதுகாப்புக் கேட்டு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர், பொலிஸ் அலுவலகங்கள்-ில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் மற்றும் மாவட்ட செயலாளர்கள் மனு அளித்தனர்.

இதனிடையே தமிழக வெற்றிக் கழகத்தில் உறுப்பினர் சேர்க்கை பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக கட்சியின் மாவட்ட செயலாளர்கள், நிர்வாகிகளுக்கு கட்சித் தலைமையிலிருந்து அவசர அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

கட்சியின் மாவட்ட செயலாளர்களையும், நிர்வாகிகளையும் உற்சாகப்படுத்தும் வகையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

இதன்படி மாவட்ட வாரியாக அதிகமான உறுப்பினர்களைச் சேர்க்கும் மாவட்ட செயலாளர்கள், நிர்வாகிகளுக்கு விக்கிரவாண்டியில் நடக்கவுள்ள முதல் மாநாட்டில் அக்கட்சியின் தலைவர் விஜய் பரிசளிப்பார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதனால், உறுப்பினர் சேர்க்கைக்கான பணியை தீவிரப்படுத்தும் வகையில் மக்களைச் சந்திக்க மாவட்ட செயலாளர்கள் மும்முரமாக இறங்கியுள்ளனர்.

# ரியூசன் சென்ற மாணவியிடம் சில்மிஷம்; ஆசிரியரை வீதியால் இழுத்துச் சென்ற மக்கள்

மாணவிகளிடம் தவறாக நடந்த ஆசிரியரை ஊர் மக்கள் ஊர்வலமாக இழுத்துச் சென்ற சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

மராட்டிய மாநிலம் பால்கர் மாவட்டத்திலுள்ள விரார் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர், மாணவ, மாணவிகளுக்கு பிரத்தியேக வகுப்பு (ரியூசன்) நடத்தி வருகிறார். அவர் மாணவிகளிடம் தவறான முறையில் நடந்துகொண்டு வருகிறார் எனக் கூறப்படுகிறது.

ஆசிரியரின் தொல்லைகளால் கடும் மன உளைச்சலுக்கு ஆளான 8ஆம் வகுப்பு மாணவி ஒருவர், வகுப்புக்குச் செல்வதை நிறுத்தியுள்ளார்.

திடீரென வகுப்புக்குச் செல்லாததன் காரணம் என்ன என மாணவியின் பெற்றோர் கேட்டபோதுதான் குறித்த ஆசிரியரின் உண்மை முகம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. அந்த ஆசிரியர் நடந்துகொண்ட விதத்தை மாணவி தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

இதைக்கேட்டுக் கொதிப்படைந்த மாணவியின் பெற்றோர், சக உறவினர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் சேர்ந்து அந்த ஆசிரியரை சரமாரியாக தாக்கினர். பின்னர் அவரின் ஆடைகளை அவிழ்த்து ஊர்வலமாக இழுத்துச்சென்றனர். இறுதியில் அவரை பொலிஸில் ஒப்படைத்தனர்.

ஆசிரியரைக் கைதுசெய்த பொலிஸார், அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த ஆசிரியரால் மேலும் சில மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.




## அமெரிக்கா சென்ற முதலமைச்சர் ஸ்டாலினுக்கு

# அமோக வரவேற்பு!

அமெரிக்கா சென்றடைந்த தமிழ் நாடு முதலமைச்சர் ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

முதலீடுகளை ஈர்ப்பதற்காக தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையிலிருந்து விமானம் மூலம் நேற்றுமுன்தினம் இரவு அமெரிக்கா நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

அவர் தமிழ்நாட்டுக்குப் பல்வேறு தொழில் முதலீடுகளை ஈர்க்க 17 நாள்கள் அமெரிக்காவுக்கு அரசு முறைப் பயணமாகச் சென்றுள்ளார்.

இதன்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் துபாய் வழியாக நேற்று பிற்பகல் அமெரிக்கா சென்றடைந்தார். அங்கு முதலமைச்சருக்கு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

இன்று சன்பிரான்சிஸ்கோவில் நடைபெறவுள்ள முதலீட்டாளர் சந்திப்பில் பங்கேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றவுள்ளார்.

இதனைத்தொடர்ந்து 31ஆம் திகதி புலம்பெயர்ந்த தமிழர்களை முதலமைச்சர் சந்தித்துப் பேசுவார்.

செப்ரெம்பர் 2ஆம் திகதி சன்பிரான்ஸ்கோவிலிருந்து சிக்காக்கோ செல்வார். அங்கு 10 நாள்கள் முக்கிய நிறுவன முதலீட்டாளர்களைச் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடு செய்து, தொழில் தொடங்க வருமாறு முதலமைச்சர் அழைப்பு விடுப்பார்.

பின்னர், அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு செப்ரெம்பர் 14ஆம் திகதி சென்னை திரும்ப முதலமைச்சர் திட்டமிட்டுள்ளார்.










# ஸ்பெயினில் களைகட்டிய தக்காளித் திருவிழா!

ஸ்பெயினில் லா டொமேடினா என்ற பாரம்பரிய தக்காளித் திருவிழாவில் உள்ளூர்வாசிகளுடன் கென்யா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட வெளிநாட்டு சுற்றுலாவாசிகளும் கலந்து கொண்டனர்.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெயினில் ஆண்டுதோறும் ஓகஸ்ட் இறுதி வாரத்தில் தக்காளித் திருவிழா நடத்தப்படுவது வழக்கம். இது பல தசாப்தங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இதன்படி, இந்த ஆண்டு ஸ்பெயினின், புனோல் நகரில் இந்தப் பாரம்பரியத் திருவிழா நேற்று நடந்தது.

இதில், வெள்ளை நிற உடையில் ஆண்கள், பெண்கள் என 22 ஆயிரம் பேர் வரை கலந்துகொண்டனர். இந்தத் திருவிழாவுக்காக நன்றாக விளைந்த, சிவப்பு நிறத்திலான ஒரு இலட்சத்து 50 ஆயிரம் கிலோக் கணக்கிலான தக்காளிகள் 7 லொறிகளில் கொண்டு வரப்பட்டு தயாராக வைக்கப்பட்டிருந்தன.

லா டொமேடினா என்ற பெயரில் நடத்தப்படும் இந்தப் பாரம்பரியத் திருவிழாவில் உள்ளூர் மக்கள் மாத்திரமின்றி, கென்யா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலாவாசிகள் திருவிழாவில் பங்கேற்கத் திரண்டிருந்தனர்.

வெளிநாட்டிலிருந்து வருவோருக்கு ஒருவருக்கு 16.70 டொலர் கட்டணம் வசூலிக்கப்பட்டது. உள்ளூர் மக்களுக்குக் கட்டணம் எதுவும் இல்லை. பட்டாசு வெடிப்புகளுடன் திருவிழா களைகட்டத் தொடங்கியது. இந்தத் திருவிழாவில், தக்காளிகளை ஒருவர் மீது ஒருவர் வீசி மகிழ்ந்தனர்.

பல மணிநேரம் இந்த நட்பு ரீதியிலான இந்தச் சண்டை நீடித்தது.

இந்தத் தக்காளிகள் அதிக அமிலத்தன்மையுடன் புளிப்பு சுவை நிறைந்தவை. மனிதர்கள் உண்பதற்கு ஏற்றது அல்ல. இதற்காகவே, இந்தத் தக்காளிகள் தனிப்பட்ட முறையில் விளைவிக்கப்படுகின்றன எனக் கூறப்படுகிறது.

இத்திருவிழாவின் முடிவில், தெருக்களில் உள்ள தக்காளிக் கழிவுகளை, அதற்காகப் பணிக்கமர்த்தப்பட்ட குழுவினர் நீரைப் பாய்ச்சியடித்து சுத்தம் செய்தனர்.





பக்கங்கள் 10

கனடா முரசு

வியாழக்கிழமை 29/08/2024

## கியூபெக்கில் பரவும் கக்குவான் இருமல்!

கனடாவின் பல்வேறு மாகாணங்களில் கக்குவான் இருமல் எனப்படும் தொடர் இருமல் நோய் பரவுகை அதிகரித்துள்ளது.

கோவிட் பெருந்தொற்று காலப் பகுதிக்கு முன்னர் 02




# கனடா பிரதமர் ட்ரூடோவின் தீர்மானத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள்!

**செப்டம்பர் மாதம் முதல், குறைந்த ஊதிய தற்காலிக பணியாளர்கள் மற்றும் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெறுவோரின் எண்ணிக்கையைக் குறைக்க திட்டமிட்டுள்ளதாக திங்கள்ன்று அறிவித்தார் கனடா பிரதமர்.**

**அத்துடன், பிற நாட்டவருக்கான கல்வி அனுமதிகளையும் குறைக்கத் திட்டமிட்டுள்ளது கனடா அரசு. மேலும், 70,000 மாணவர்கள் நாடு கடத்தப்படும் அபாயமும் உருவாகியுள்ளது.**

ஆகவே, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் முடிவை எதிர்த்து கனடா முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளில் சர்வதேச மாணவர்கள் இறங்கியுள்ளார்கள்.

முன்னர் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் மட்டும் மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்த நிலையில், தற்போது, ஒன்ராறியோ, மனித்தோபா மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா உட்பட பல மாகாணங்களில் பேரணிகள் துவங்கி யுள்ளன.

வீட்டை அடமானம் வைத்து, கடனும் வாங்கி கனடாவுக்கு வந்து, கல்வி கற்று, பணி செய்து, வரிகளும் செலுத்தியும், இப்போது நாடுகடத்தப்படும் நிலைக்கு ஆளாகியுள்ளார்கள் புலம்பெயர்ந்தோர் பலர் என்பது குறிப்பிடத்தக்கது.





# ஹாலிபெக்ஸில் கரடித் தாக்குதலுக்கு இலக்கானவர் தப்பி உயிர் பிழைத்தார்

கனடாவின் ஹாலிபெக்ஸ் பகுதியில் நபர் ஒருவர் கரடியின் கொடூரத் தாக்குதலுக்கு இலக்காகி உயிர் தப்பியுள்ளார்.

திகிலூட்டும் இந்த தாக்குதல் சம்பவத்தில் சிக்கி உயிர் பிழைக்க கிடைத்தமை அதிர்ஷ்டவசமானது என தாக்குதலுக்கு இலக்கான நபர் தெரிவிக்கின்றார்.

வெலேஸ் இங்கிலாந்து என்ற நபரே இவ்வாறு கரடியின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

ஹாலிபெக்ஸ் பகுதியின் சேர்வாட்டர் பிளையர் பாதையில் அதிகாலை நேரத்தில் சென்றபோது இந்தக் கரடி தாக்கியதாக அவர் தெரிவித்துள்ளார்.

கரடி தாக்குதல் குறித்து அறிந்து கொண்ட வனவள பாதுகாப்பு அதிகாரிகள் தீவிர தேடுதல் நடத்தியுள்ளனர்.

எனினும், அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதல்களின் போது கரடியைக் கண்டுபிடிக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் அந்த நபருக்கு எவ்வாறு காயங்கள் ஏற்பட்டன என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்த வேண்டுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெரிய கறுப்புக் கரடி ஒன்று தம்மை தாக்கியதாக இங்கிலாந்து தெரிவிக்கின்றார்.

கரடி தமது நெஞ்சு பகுதியில் பாய்ந்து தாக்கியதாகவும் தலையைத் தாக்கியதாகவும் தம்மைத் தூக்கி எறிந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு தடவை அன்றி இரண்டு தடவைகள் இந்த கரடி தம்மை தாக்கியதாக அவர் தெரிவிக்கின்றார்.

அவரின் கைகள், முகம், கால் பகுதியில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

தலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தையல் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் ஏதேனும் குற்றச் செயல்கள் இடம் பெற்றிருக்க வாய்ப்பு இல்லை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## கியூபெக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலவிய அளவை விடவும் தற்பொழுது இந்த நோய் தொற்று பரவுகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கியூபிக் மாகாணத்தில் இந்த ஆண்டில் இதுவரையில் 11,670 பேருக்கு இந்த நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் வருடாந்தம் சராசரியாக 562 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த ஆண்டில் கக்குவான் இருமல் நோயினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

10 முதல் 14 வயதிலான சிறுவர்களே இந்த நோயினால் அதிக அளவு பாதிக்கப்படுகின்றனர் என கியூபெக் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



ஒன்றாரியோ, ரொறன்ரோ, நியூ பிரவுன்ஸ்வீக் உள்ளிட்ட பல இடங்களில் இவ்வாறு கக்குவான் இருமல் நோயின் தாக்கம் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

இந்த நோயை தடுப்பூசி மூலம் கட்டுப்படுத்த முடியும் என கனடிய பொது சுகாதார அலுவலக அலுவலகர் டாக்டர் திரேசா டெம் தெரிவித்துள்ளார்.

இந்த நோயானது சிறுவர்கள் மத்தியில் உயிர் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு பாரதூரமானது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# சந்தேகநபர் ISIS காணொலியில் இடம் பெற்றமை குடியேற்ற அனுமதி வழங்கிய சமயம் தெரியாதாம்!

ஒன்றாரியோ, ஓகஸ்ட் 29

பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள ஒரு நபரின் குடியேற்ற விண்ணபத்திற்கு ஒப்பு தல் அளிக்கப்பட்டபோது ISIS காணொ லியில் அவர் இடம்பெற்றி ருந்தார் எனக் கூறப்படுவது தெரியாது என கனடா எல்லை சேவைகள் நிறுவனத் தின் அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

நேற்று நாடாளுமன்ற குழு கூட் டத்தில் கேட்கப்பட்ட சாட்சியத் தின் போது இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒன்றரியோ, ரிச்மண்ட் ஹில்லில் கைது செய்யப்பட்ட அஹ்மத் ஃபுவாட் மோஸ்டாஃபா எல்டிடி, (62 வயது), மற்றும் அவரது மகன் மோஸ்டாஃபா எல்டிடி (26 வயது), ஆகியோர் இஸ்லா மிய அரசு ஈராக் மற்றும் லெவன்ட் சார்பாக கொலை செய்ய சதி செய்த தாக ஒன்பது பயங்கரவாத குற்றச்சாட் டுகளை எதிர்கொண்டனர். ஜூலை 31 அன்று இந்த குற்றச் சாட்டுகளை தேசிய பொலிஸ் பிரிவு அறிவித்தது.

அத்துடன், இவர்கள் இரண்டு பேரும் ரொறன்றோவில் ஒரு தீவிர மான, வன்முறைத் தாக்குதலைத் திட்டமிடு வதற்கான மேம்பட்ட கட்டத்தில் இருந்தனர் எனவும் அது கூறியது.

இவர்களின் குடியேற்றக் கோப்பின் விரிவான காலவரிசையை பொது பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப் புக் குழுவிற்கு தனது சாட்சியத்தின் போது பொது பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லெப்லாங்க் வழங்கி னார்.



# மார்க்கம் ரியல் எஸ்டேட் பெண்ணை கொன்றவர் நாட்டை விட்டு ஓட்டம்?

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 29

மார்க்கம் ரியல் எஸ்டேட் பெண் ஒருவரின் மரணம் தொடர்பிலான சந்தேகநபர் நாட்டை விட்டு வெளியே றியிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த மாத ஆரம்பத்தில் காணாமல் போயிருந்த யுக்-டிங் அனிடா மிமி, மூன்று நாள்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் 47 வய தான Zhixiong Marko Hu என்பவரை சந் தேகநபராக யோர்க் பிராந்திய பொலி ஸார் அறிவித்துள்ளனர்.

இந்தச் சந்தேநபர் ஒன்றாரியோவில் இல்லை என்பதனால், அவருக்கு நாட ளாவிய பிடிவாறந்து பிறப்பிக்கப்பட் டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட் டுள்ளனர்.

எனினும், அந்தச் சந்தேகநபர் நாட் டை விட்டு வெளியேறியிருக்கலாம் என்ற சந்தேகத்தையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.




# ரொறன்றோ போக்குவரத்து அமைப்பின் தற்காலிகத் தலைவராக புரூஸ் மக்ரிகோர்

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 29

ரொறன்றோ போக்குவரத்து ஆணைக்குழுவின் துணை தலைமை நிர்வாக அதிகாரியான புரூஸ் மக்ரிகோர் நகரின் பொது போக்குவரத்து அமைப்பின் தற்காலந்த் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற சிறப்புக் கூட்டத்தின் போது, ரொறன்றோ போக்குவரத்து ஆணைக்குழுவானது புரூஸ் மக்ரிகோர செயல் தலைமை நிர்வாக அ திகாரியாக நியமிக்க ஒப்புதல் அளித்தது.

வெள்ளிக்கிழமையன்று ரிக் லியரி முறைப்படி பதவி விலகியதன் பிறகு அவர் பதவியை ஏற்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'இடைக்கால தலைமை செயல் அதிகாரி நியமனத்தை நாங்கள் இறுதி செய்யும் போது, ரொறன்றோ போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வழிகாட்டவும் எங்கள் நகரத்தை நகர்த்தவும் புரூஸ் உதவுவார், வரும் வாரங்களில் அறிவிப்பை நான் எதிர்பார்க்கிறேன்' என்று ரொறன்றோ போக்குவரத்து ஆணைக்குழு சபைத் தலைவர் ஜமால் மியர்ஸ் கூறியுள்ளார்.




# முதல் கறுப்பின பெண் இன்ஸ்பெக்டருக்கு ரொறன்றோவில் 2 வருடப் பதவிக்குறைப்பு

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 29

2021 பதவி உயர்வு செயல்பாட்டில் பல சேவை உறுப்பினர்களுக்கு உதவியமைக்காக ரொறன்றோ பொலிஸ் சேவையின் முதல் கறுப்பின பெண் கண்காணிப்பாளருக்கு(இன்ஸ்பெக்டருக்கு) இரண்டு வருடப் பதவிக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதிகாரி ஸ்டேசி கிளார்க் கடந்த ஆண்டு ஏழு தொழில்முறை முறை கேடு குற்றச்சாட்டுகளுக்கு குற்றத்தை ஒப்புக் கொண்ட பின்னர், டவுன்டவுன் ரொறன்றோவில் உள்ள ஒரு பொலிஸ் நீதிமன்ற விசாரணையில் தண்டனை பெற்றார்.

கிளார்க் இப்போது இன்ஸ்பெக்டராகப் பணியாற்றுவார், அவருடைய முந்தைய பதவியில் இருந்து ஒரு தரம் குறைந்து, 24 மாதங்கள் கடந்த பிறகு அவர் மீண்டும் கண்காணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

நேற்றைய விசாரணையைத் தொடர்ந்து ஊடகத்துடன் பேசிய கிளார்க், முடிவைச் செயல்படுத்தவும், அடுத்து என்ன நடக்க வேண்டும் என்பதைத் திட்டமிடவும் தனது குடும்பத்தினருடன் நேரம் ஒதுக்க திட்டமிட்டுள்ளதாகக் கூறினார்.






# கனடாவில் டாக்ஸி மோசடிகள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கனடாவில் இடம்பெறும் டாக்ஸி மோசடி குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெண் ஒருவர் ஏமாற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

பெண் ஒருவர் டாக்ஸி கடடணமாக ஏழு டொலர்களை செலுத்திய போது 7500 டொலர் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

கனடாவின் லண்டனிலிருந்து ரொறன்ரோ நோக்கிப் பயணித்த பெண் ஒருவரே இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளார். டெபிட் அட்டையின் மூலம் தாம், கட்டணத்தை செலுத்தினார் என அந்தப் பெண் தெரிவிக்கின்றார்.

லியனி பியச்சுமீன் என்ற பெண்ணே இவ்வாறு தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். சிறிய தூரத்தை பயணம் செய்து கட்டணத்தை செலுத்த முயற்சித்துள்ளார்.

பயண தூரத்திற்கான கட்டணமாக 7டொலர்கள்காண்பிக்கப்பட்டதாகவும் குறித்த பெண் 10 டாலர்களை குறித்த நபருக்கு வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் குறித்த நபர் பத்து டாலர்களை ஏற்க மறுத்து விட்டதாகவும் டெபிட் அட்டை மூலம் மட்டுமே கொடுப்பனவு செய்ய முடியும் எனவும் சாரதி கூறியுள்ளார் எனத் தெரிவிக்கின்றார்.

எனினும் அந்தப் பெண் விருப்பமின்றி டெபிட் அட்டை மூலமாக கட்டணத்தைச் செலுத்தியுள்ளார்.

இந்த டெபிட் அட்டையை பயன்படுத்தி கொடுப்பனவு செய்து மறுநாள் பார்த்தபோது தனது கணக்கில் சில மோசடியான கொடுக்கல் வாங்கல் இடம் பெற்றிருப்பதாகவும் மொத்தமாக 7,485 டாலர்கள் மோசடியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பதையுன் அவதானித்தார் எனத் தெரிவிக்கின்றார்.

டாக்ஸி மோசடிகள் அதிக அளவில் இடம் பெற்று வருவதாக கனடிய டாக்ஸி ஒன்றியம் தெரிவித்துள்ளது. எந்த ஒரு நபரும் தாம் டாக்ஸி சாரதி என தோன்றி மோசடிகளை செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக கனடிய டாக்ஸி ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தப் பெண் மோசடியாக இழந்த பணத்தை வங்கி மீள அறவீடு செய்து வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு நேர்ந்த நிலையை வங்கிக்கு தெளிவுபடுத்திய பின்னர் அந்த கொடுப்பனவுகளை ரத்து செய்து பணத்தை மீண்டும் தனது கணக்கில் வரவு வைத்துள்ளதாகத் தெரிவிக்கின்றார்.

பல்வேறு வழிகளில் இவ்வாறான டாக்ஸி மோசடிகள் இடம் பெற்று வருகின்றன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.



# நோவா ஸ்கோசியாவில் மருத்துவ பணியாளர்கள் தொழிற்சங்கப் போரில்?

கனடாவின் நோவா ஸ்கோசியா பகுதியில் சுகாதாரப் பணியாளர்கள் தொழிற்சங்க போராட்டம் ஒன்றை முன்னெடுக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் இது தொடர்பிலான எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்திற்கும் சுகாதார பணியாளர்களுக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சு வார்த்தைகள் வெற்றி அளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இந்த வாரத்தில் பணி புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நோவா ஸ்கோசியாவில் சுமார் 9000 சுகாதார பணியாளர்கள் தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்றைய தினமும் அரசாங்கத்துடன் தொழிற்சங்கம் பேச்சுவார்த்தை முன்னெடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பேச்சுவார்த்தை வெற்றி கிடைக்காவிட்டால் தொழிற்சங்க போராட்டத்தில் குதிக்க நேரிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# கனடாவின் டுப்ரின் பகுதியில் தீ விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

## நாலவர் காயம் ஒருவர் ஆபத்தான நிலையில்

கனடாவின் டுப்ரின் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

ருசெல்ஹோம் வீதி, காலேஜ் வீதி மற்றும் டேவர்கோர்ட் வீதிகளுக்கு அருகாமையில் இந்த வீடு அமைந்துள்ளது.

தீ விபத்து குறித்து அறிந்து கொண்ட தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

தீ விபத்தில் உயிரிழந்தவரது குடும்பங்களுக்கு தீயணைப்பு படையினர் ஆழ்ந்த இரங்கலை வெளியிட்டுள்ளனர்.

வீட்டிலிருந்து ஐந்து பேர் மீட்கப்பட்டனர் எனவும் அவர்களில் ஒருவரே உயிரிழந்தார் எனவும், ஏனையவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் எனவும் உயிர் காப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காயம் அடைந்தவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும் ஏனையவர்களுக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் இந்த சம்பவம் தொடர்பில் ரொறன்ரோ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.










# 4 பழங்குடியினப் பெண்களைக் கொன்ற குற்றவாளிக்கு நான்கு ஆயுள் தண்டனை

மனிடோபா, ஓகஸ்ட் 29

2022 ஆம் ஆண்டு வின்னிபெக்கில் நான்கு பழங்குடியினப் பெண்களைக் கொன்ற வழக்கில் தொடர் கொலையாளி ஜெரமி ஸ்கிபிக்கிக்கு 25 ஆண்டுகள் பிணை கிடைக்காமல் ஒரே நேரத்தில் நான்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கிங்ஸ் நடுவம் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி க்ளென் ஜாயல், கடந்த மாதம் 37 வயதான ஸ்கிபிக்கியை நான்கு முதல் நிலை கொலைக் குற்றங்களில் குற்றவாளி எனத் தீர்ப்பளித்த பின்னர், தானாகவே தண்டனையை விதிக்க சட்டத்தால் கட்டுப்பட்டதாக ஒரு தண்டனை விசாரணையில் கூறியுள்ளார்.

மோர்கன் ஹெரிஸ், மர்சிடெஸ் மைரன், ரெபெக்கா கொன்டொய்ஸ் ஆகியோரின் உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மற்றும் பழங்குடி சமூக உறுப்பினர்கள் இந்த விசாரணையின் போது நீதிமன்றத்தில் திரண்டிருந்தனர்.




# எயார் கனடா விமான சேவையில் பயணப் பதிவுகளுக்குச் சலுகை!

## விமானிகளின் தொழிற்சங்கப் போராட்ட முஸ்தீபால்

கனடாவின் முன்னணி விமான சேவை நிறுவனங்களில் ஒன்றான எயார் கனடா விமான சேவை நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை ஒன்றை அறிவித்துள்ளது.

விமான சேவை நிறுவனத்தின் விமானிகள் தொழிற்சங்க போராட்டம் ஒன்றை முன்னெடுக்க கூடிய சாத்தியம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பயணிகள் பதிவு செய்யும் விமான பயணங்கள் தடைப்பட்டால் மீள் பதிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


அதாவது ஏதேனும் ஓர் காரணத்தினால் திட்டமிடப்பட்ட அடிப்படையில் விமான பயணத்தை மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் பயணிகள் வேறும் ஒரு திகதியைத் தெரிவு செய்து பயணிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விமான சேவை நிறுவனத்தின் விமானிகள் தொழிற்சங்க போராட்டம் நடத்துவது தொடர்பில் காலக்கெடு அறிவித்துள்ளது.

அந்தக் காலப்பகுதியில் இந்தப் பயண சீட்டுகளை மீள் பதிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் முன்னணி விமான சேவை நிறுவனமான எயார் கனடா விமான சேவையில் சுமார் 5,000 விமானிகள் கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் விமானிகள் தொழிற்சங்கம் நடத்திய கூட்டத்தில் 98 வீதமானவர்கள் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தங்களது ஆதரவினை வெளியிட்டுள்ளனர்.




# சிசு ஒன்றைக் கொலை செய்தனர் என இரு பழங்குடியினர் மீது குற்றச்சாட்டு!

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் சிசு ஒன்றைப் படுகொலை செய்தனர் என ஆண் ஒருவர் மீதும் பெண் ஒருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தின் பழங்குடியின சமூகத்தினர் வாழும் மனிடோலியன் தீவுப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட சிசு ஒருநாள் சிகிச்சையின் பின்னர், உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள 33 வயதான பெண் மற்றும் 34 வயதான ஆண் ஆகியோரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட இருவரும் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருவரும் கொலை குற்ற செயலில் ஈடுபட்டனர் எனவுன் கவனயீனமாக செயல்பட்டனர் எனவும், உரிய மருத்துவ உதவிகளை வழங்க தவறினர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த இருவருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிசுவிற்கும் இந்த இருவருக்கும் இடையிலான உறவு என்ன என்பது பற்றிய தகவல்களை பொலிஸார் வெளியிடவில்லை.



# டேட்டிங் செயலி மூலம் தொடர்பு கொண்டு துப்பாக்கி முனையில் கொள்ளையிட்டோர்

கனடாவில் பிரபலமான டேட்டிங் செயலி ஒன்றின் மூலம் தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட சிலர் துப்பாக்கி முனையில் கொள்ளையிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

பிரபலமான டேட்டிங் செயலி ஒன்றின் ஊடாக தொடர்பினை ஏறபடுத்திக் கொண்ட சிலர், துணையை நேரில் சந்திக்க சென்றிருந்தபோது இவ்வாறு கொள்ளைக்கு இலக்காகினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திப்பதற்காக சென்றிருந்த நபரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி, தாக்குதல் நடத்தி, பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹமில்டன் பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் அலைபேசிகளை பறித்து சந்தேக நபர்கள் பணப் பரிமாற்றம் செய்து கொண்டனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதே விதமாக ஏமாற்றி மற்றுமொருவது வீட்டிற்குச் சென்று கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களில் இரண்டு பேரின் படங்களைப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் குறித்த தகவல்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எவ்வளவு பணம் கொள்ளையிடப்பட்டது என்பது தொடர்பிலான தகவல்கள் வெளியிடப்படவில்லை.



# மெக்சிகோ நாட்டின் இறையாண்மையை மதிப்பதாக கனடா உறுதிப்படுத்துகிறது!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 29

மெக்சிகோவின் இறையாண்மையை மதிப்பதாகவும், உத்தேச அரசமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக அந்த நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடும் எண்ணம் இல்லை என்றும் கனடா வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

உத்தேச நீதித்துறை மறுசீரமைப்பு குறித்து இரு நாடுகளின் கருத்துக்களால் கனேடிய மற்றும் அமெரிக்க தூதரகங்களுடனான உறவை ‘இடைநிறுத்தத்தில்’ வைத்துள்ளதாக மெக்ஸிகோவின் ஜனாதிபதி ஆண்ட்ரேஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

மெக்சிகோவின் உள்விவகாரத்தில் கனடா தலையிடுவதாகவும் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

மெக்ஸிகோவில் உள்ள கனேடிய முதலீட்டாளர்கள், அந்த நாட்டுடனான வர்த்தகம் மற்றும் முதலீட்டை முன்னேற்றுவதற்கான நம்பிக்கையை இந்த நீதித்துறை மறுசீரமைப்பு பாதிக்கக் கூடும் என வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மெக்சிகோவின் உள் விவகாரங்களில் தலையிடும் திட்டம் எதுவும் இல்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரிட்டிஷ் கொலம்பியத் தேர்தல் வலது - இடது போட்டியாகிறது!



பிரிட்டிஷ் கொலம்பியா, ஓகஸ்ட் 29

பிரிட்டிஷ் கொலம்பியாவின் வரவிருக்கும் இலையுதிர்காலத் தேர்தல், பி.சி யுனைடெட் தலை வர் கெவின் ஃபால்கனின் ஆச்சரியமான நடவடிக்கையுடன், உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியின் பிரச்சாரத்தை இடைநிறுத்தி, கன்சர்வேட்டிவ் கட்சி போட்டி யாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கு தனது ஆதரவாளர்களை வற்புறுத்துவதன் மூலம் ஒரு வலது - இடது போட்டியாக மாற்றப்பட்டுள்ளது.

கன்சர்வேடிவ் கட்சியின் இலச்சினையுடன் மேடைக்குப் பின்னால் நின்றிருந்த பி.சி யுனைடட் வேட்பாளர் பால்கனுடன் ஒரு கூட்டு செய்தி மாநாட்டில் கன்சர்வேடிவ் தலைவர் ஜான் ரஸ்டாட் நேற்று இதனை வெளிப்படுத்தினார்.

‘பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திற்கு இது சரியான விடயம்’ என்று ஃபால்கன் கூறியுள்ளார்.

வலது மையத்தில் வாக்குப் பிளவைத் தடுக்கவும் புதிய ஜனநாயகக் கட்சியினர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதைத் தடுக்கவும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார் என அவர் தெரிவித்துள்ளார்.



# எதிர்க்கட்சித் தலைவரின் பேரணியைப் பாராட்டிய வலையமைப்புக்கு பின்னால் திட்டம் ஏதுமில்லை!

## புதிய ஆய்வு கண்டறிந்துள்ளதாகத் தகவல்

ஒன்றாரியோ, ஒகஸ்ட் 29

எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொய்லியேவின் பேரணியைப் பாராட்டிய சமூக ஊடக போட் வலையமைப்புக்குப் பின்னால் மத்திய கன்சர்வேடிவ்கள் இருந்ததைக் குறிக்கும் எந்த ஆதாரமும் இல்லை என ஒரு புதிய ஆய்வு கண்டறிந்துள்ளது.

கெர்க்லாண்ட் ஏரியில் கன்சர்வேடிவ் தலைவரின் ஜூலை பேரணியைப் பற்றி பதிவிட்ட நூற்றுக்கணக்கான எக்ஸ் கணக்குகளுக்குப் பிறகு கனடிய டிஜிட்டல் மீடியா ரிசர்ச் நெட்வொர்க் இந்த விசாரணை யைத் தொடங்கியது.

இடுகைகள் மிகவும் ஒத்தவையாக இருந்ததால், புதிய ஜனநாயகக்

கட்சி மற்றும் லிபரல் கட்சியின் உறுப்பினர்கள், கன்சர்வேடிவ்களை நோக்கி விரல் நீட்டிய நிலையில், பொட்களின் வலையமைப்பின் பின்னால் யார் இருக்கிறார்கள் என்ற கேள்வியை உடனடியாக எழுப்பப்பட்டது.

எனினும், இதில் தமக்கு எந்த தொடர்பும் இல்லை கன்சர்வேடிவ் கட்சி மறுத்தது.



# ஜாஸ்பர் பகுதிக் காட்டுத்தீயினால் 880 மில்லியன் டொலர்கள் நட்டம்

கனடாவின் ஜாஸ்பர் பகுதியில் இடம்பெற்ற காட்டு தீ காரணமாக பாரிய அளவு நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பகட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் காட்டுத்தீ காரணமாக சுமார் 880 மில்லியன் காப்புறுதித் தொகை வழங்கப்பட வேண்டி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய காப்புறுதி முகவர் நிறுவனம் இது தொடர்பான தகவலை வழங்கியுள்ளது. அல்பர்ட்டா மாகாணத்தில் பதிவான இரண்டாவது மிகப்பெரிய இயற்கை அனர்த்த சேதம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2016 ஆம் ஆண்டு அல்பர்ட்டாவின் மெக்முரேய் பகுதியில் இடம்பெற்ற காட்டுத்தீ காரணமாக 4.4 பில்லியன் டொலர் நட்டம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனடிய வரலாற்றில் பதிவான மிகவும் மோசமான சேதம் இது வென்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 25 ஆயிரம் மக்கள் ஜாஸ்பர் தேசிய பூங்கா பகுதியை விட்டு இடம்பெயர நேரிட்டிருந்தது.

சுமார் 350 கட்டடங்கள் ஜாஸ்பர் பகுதியில் சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.